Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano® since '92
Innovation In Inert Metals

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2017-2018

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jan.18 : 1085 Nos.
  - Up to Dec.17 : 1079 Nos.
- **Performance Jan. 18 ...**
  - Turnover growth : 2.23%
  - Employment growth : -0.70%
  - 100% Attendance : 6.38%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- Tiaano Vidyashram – Tiaano Vidyashram (CBSE Curriculum)




## அலுவலக உறவு நிர்வாகம்

அலுவலகம் என்பது நமது சொந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய தளமல்ல என்பதை நினைவில் கொள்ளவும்.

அலுவலகத்தில் உறவு என்பது, நாம் ஏற்றுக் கொண்ட பணிக்கும் நமக்கும் இடையே இருப்பது தான். வேறு உறவுகள் அங்கே நாடாதிருப்பதே நன்று.

அலுவலகத்தில் நமக்கும் வேறொருவருக்கும் இடையே ஒரே விதமான மன இடைவெளி இருக்க வேண்டும். அது மற்றவர்க்குப் புலனாகும் படி நமது நடத்தை இருக்க வேண்டும். இப்படிப் பழகுகின்ற எளிய ஊழியர், நிர்வாகியாகும் வாய்ப்பு இருக்கிறது. இப்படிப் பழகுகின்ற நிர்வாகி, எளிய ஊழியர்களின் நம்பிக்கையைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

அலுவலகத்தில், யார் சரி, யார் தவறு என்பதைக் காட்டிலும், எது சரி, எது தவறு என்னும் போக்கே அனைவருக்கும் நலம் சேர்க்கும்.

அலுவலகத்தில் எவரோடும் தனிப்பட்ட முறையில் நட்போடு இருக்க வேண்டும். ஆனால் எந்தப்பிரச்சினையையும் சொந்த விருப்பு வெறுப்பின்றி எதிர் கொள்ள வேண்டும். You must have a personal rapport with everyone but you must deal with issues only impersonally.

அலுவலகத்தில், ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய ஒரே உணர்ச்சி குழு மனப்பான்மை. அதாவது Team Spirit.

இந்த குழு மனப்பான்மை தான் குடிமை உணர்வுக்கு (Spirit of citizenship) ஆதாரம்.

இந்த குழு மனப்பான்மை தான் இன்றைய சமுதாயத்தின் பிடரியைக் கவ்விக் கொண்டிருக்கும் பற்பல பிணிகளுக்கும் தீர்வாகும்.

– Mr. V.P.Jeyakumar
Managing Director.

## FUNCTIONAL WISHES




Happy Holi
2nd March

**Best Wishes from Tiaano Employees**

## BIRTHDAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.



| | |
|---|---|
| Mr. Dhasarathan.N<br>*Admin* | 03rd Mar. |
| Mr. Sekhar.E<br>*Production* | 03rd Mar. |
| Mr. Ramesh.K<br>*Coating* | 15th Mar. |
| Mrs. Bhavani.M<br>*Admin* | 17th Mar. |
| Mr. Mathan Kumar.S<br>*Coating* | 18th Mar. |
| Mr.MathiKrishnan.S<br>Marketing | 20th Mar. |
| Mrs.Kala.E<br>*Finance* | 22nd Mar. |
| Mr. Sampath Kumar.G<br>*Production* | 22nd Mar. |
| Mr. Sabapathy.A<br>*Admin* | 24th Mar. |
| Mr. ArokyaRaj.S<br>*Production* | 27th Mar. |
| Mr.Santha Kumar<br>*Production* | 30th Mar. |

**Best Wishes from Tiaano Employees**

### பொன்மொழிகள்

- அறிவியல் மனித இனத்துக்கான ஒரு அழகான பரிசு, அதை நாம் சிதைத்து விட கூடாது.
- வானத்தை பாருங்கள். நாம் தனித்து இல்லை இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நம்மிடம் நட்பாக உள்ளது. கனவு காண்பவர்களுக்கும், உழைப்பவர்களுக்கும் மட்டுமே அது சிறந்தவற்றை வழங்குகிறது.

- *Dr.Abdul Kalam*

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

கவலை வயப்பட்டிருந்த இளைஞன் ஒருவன் குளக்கரையில் அமர்ந்து தண்ணீரில் கல்லெறிந்து கொண்டிருந்தான்.

பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் பொதுவாய்ச் சொன்னார், “மனம் ஒரு குளம். கவலைகளை எறிய எறிய அதிலிருந்து வட்டங்கள் கிளம்பிக் கொண்டே இருக்கும். குளத்தின் அமைதி குலையும். வட்டம் கிளப்புவதைத் தடுக்க வேண்டுமா? கல்லெறிவதை நிறுத்து, கவலைப்படுவதைத் தடுக்க வேண்டுமா? இதயம் என்ற குளத்தில் வேண்டாத எண்ணங்கள் நுழைவதை நிறுத்து”.

சிறிது நேரத்தில் குளமும் தெளிந்தது, மனமும் தெளிந்தது.

– கான்பிடன்ஸ்கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

### விடாமுயற்சி

ஓரிருமுறை முயற்சி செய்து விட்டு, ‘இதற்கு மேல் என்னால் முடியாது…’ என்று சொல்பவன் சராசரி. ‘என் இலட்சியத்தை எட்டும் வரை முயற்சி செய்து கொண்டேயிருப்பேன்…’ என்று சொல்பவன் சாதனையாளன்.

தோல்வியால் துவண்டர்களை, இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. தோல்வி உங்களுக்கு, புதிய உற்சாகத்தையும், வைராக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக் கூடாது. யாருக்கும் முதல் முயற்சியிலேயே, மிகப் பெரிய வெற்றி கிடைத்து விடுவதில்லை.

விடாமுயற்சியால் வரலாற்றில் இடம் பெற்ற சிலரைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

சிறுபிள்ளையாக இருக்கையில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட வில்மா ருடால்ப் என்ற பெண்மணி 1960 ஒலிம்பிக்கில், ஓட்டப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். ஐந்து வயதில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட ஷெல்லிமான் 1956 ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

ஒரு ஊருக்குச் செல்வதற்கு பல வழிகள் இருப்பது போல நம்முடைய இலக்கை அடைவதற்கும் பல்வேறு வழிகள் உள்ளன. ஒரு வழி அடைப்பட்டால் மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டும். மிகப் பிரபலமான விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீனிடம் முட்டாள் தனத்துக்கு விளக்கம் கேட்ட போது “ஒரே வேலையை திரும்பத் திரும்ப ஒரே மாதிரி செய்துவிட்டு வித்தியாசமான பலனை எதிர்பார்ப்பதற்கு பெயர் தான் முட்டாள் தனம் …” என்றாராம்.

சாதனையாளர்கள் தங்களுடைய முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று விடுவதில்லை. தான் இழந்த நாட்டை மீட்கப் போராடிய ராபர்ட் புரூஸ், இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த எடமண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் போன்ற பலரும் தங்களின் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறவில்லை. தேசியகவி பாரதியாரும், கவிஞர் கண்ணதாசனும் தங்களின் ஆரம்பகால கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெறவில்லை.

அலெக்சாண்டர் கிராகம்பெல் காது கேளாத தன் மனைவிக்கு காது கேட்பதற்காக கருவி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுப்பட்ட போது தான் தொலைபேசியைத் தற்செயலாக கண்டுபிடித்தார்

## தெரிந்து கொள்வோம்

### திருக்குறளின் அதிசயங்கள்

- திருக்குறளில் தமிழ், என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.
- திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துகள் – 42,194.
- திருக்குறளில் தமிழ் எழுத்துகள் 247–ல் 37 எழுத்துகள் மட்டும் இடம் பெறவில்லை.
- திருக்குறளில் இடம் பெறும் இருமலர்கள் – அனிச்சம், குவளை.
- திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம்– நெருஞ்சிப்பழம்.
- திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை–குன்றிமணி.
- திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து — ஔ
- திருக்குறளில் இடம் பெற்ற இரண்டு மரங்கள் – பனை, மூங்கில்.
- திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துகள் – னீ, ந.
- திருக்குறளில் இடம் பெறாத ஒரே எண்– ஒன்பது.
- திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.
- திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.

*– Collected From Internet.*

### A Few Interesting Facts

- No Word in the English language rhymes with Month, Orange, Sliver or Purple.
- "Underground is the only word in the English language that begin and end with the letters "und".
- On reversing the words they spell the same : "Malayalam", "Liril", and "Madam".
- The only 15 letter word that can be Spelled without repeating a letter is "Uncopyrightable".
- "Almost" is the longest word in the English language with all the letters in alphabetical order.

*- Collected From Internet.*

நேருவுக்கு பின் இந்தியப் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி பள்ளிக்கு செல்வதற்கு தினமும் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாததால் புத்தகத்தையும் கழற்றிய உடையையும் தலைக்குமேல் சுமந்தபடி நீச்சலடித்து தினமும் அக்கரையை அடைந்திருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அதிகாலையில் வீடுவீடாகச் சென்று பேப்பர் போட்டுவிட்டு பின் பள்ளிக்குச் சென்றவர். இப்படிச் சொல்ல ஆரம்பித்தால் சுதந்திர இந்தியாவில் அடி மட்டத்திலிருந்து புகழின் உச்சத்தை அடைந்தவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இன்று உலகிலேயே மிகப்பெரிய பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கும் பில்கேட்ஸ், ஆப்பிள் நிறுவனம் மூலம் கம்ப்யூட்டர் மற்றும் செல்போன் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய ஸ்டீவ் ஜாப்ஸ் ஆகிய இருவரும் கல்லூரிப் படிப்பை பாதியிலேயே விட்டவர்கள். பில்கேட்ஸ் தன் நண்பனுடைய வீட்டில் கார் நிறுத்துமிடத்தில் ஆரம்பித்த நிறுவனம் தான் உலகப் புகழ் பெற்ற மைக்ரோசாப்ட்.

தனக்கு நிறைய திறமையிருந்தும் அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுபவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். புகழின் உச்சிக்குச் சென்ற பலர் ஆரம்ப காலத்தில் அங்கீகாரம் கிடைக்காமல் போராட நேர்ந்திருந்தது.

ஒரு துறையில் சாதனை படைக்க இளம் மேதையாக இருந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆர்வமும் ஈடுபாடும் திறமையும் உழைப்பும் இருந்தால் எந்த வயதிலும் சாதனை படைக்கலாம். மிகச் சிறந்த சாதனையாளர்கள் துரதிர்ஷ்டவசமாக சறுக்கி விழ நேர்ந்தாலும் அவர்களுடைய தன்னம்பிக்கையும் கம்பீரமும் சற்றும் குறைவதில்லை.

எல்லா தோல்விகளும் அனைவரையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. உதாரணமாக தேர்வு, போட்டி, வியாபாரம் மற்றும் தற்கொலை செய்து கொள்பவர்கள் ஒரு ரகம். ஆனால் அவர்களை விட மோசமாக தோல்வியடைந்தவர்கள் " பரவாயில்லை என்று இது ஒரு நல்ல பாடம்…" என்று ஆக்கப்பூர்வமாக எடுத்துக் கொள்பவர்கள் மறுரகம். நாம் இந்த இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம்! எப்போதெல்லாம் பிரச்சனை மற்றும் தோல்விகளைச் சந்திக்க நேர்கிறதோ அப்போது இரண்டு கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம். "அதனால் என்ன? அடுத்து என்ன? நல்ல வழி தானாக பிறக்கும்.

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி LXIX)

உலகம் என்பது கட்டங்களின் தொகுப்பு

இது போல் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதில் இன்னொரு நல்ல பலன், இப்போதைய வழிமுறைகளை மேம்படுத்துவதற்கு அவர்களிடமிருந்து சில மிகப் பிரமாதமான யோசனைகள் வர கூடும். இவற்றைப் பரவலாகச் செயல்படுத்துவதன் மூலம் அவர்களுடைய உற்சாகமும் அதிகரிக்கும், சுத்தம் செய்வதற்கான நேரமும் குறையும்.

புகழ்பெற்ற ஃபோர்ட்(Ford) நிறுவனத்தின் தொழிற்சாலை ஒன்றில், ஜன்னல் கண்ணாடிகளைச் சுத்தம் செய்வதற்கு ஒரு ஸ்பாஞ்ச் பயன்படுத்தப்பட்டது. இதை ஒரு விசேஷ திரவத்தில் முக்கியெடுத்து, கண்ணாடிகளைத் தேய்த்துச் சுத்தப்படுத்த வேண்டும்.

தினந்தோறும் இப்படித் திரும்பத் திரும்ப நூற்றுக்கணக்கான கண்ணாடிகளைச் சுத்தம் செய்து சலித்துப்போன ஊழியர் ஒருவர், இதற்கு விடிவுகாலமே கிடையாதா என்று ஏங்கினார்.

அப்போதுதான் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. ஸ்பாஞ்சைக் கையில் எடுத்துப் பயன்படுத்துவதால் தானே ஒவ்வொரு இடமாகச் சென்று

## கவிதைகள்

### வாழ்க்கை

காரில் போகிறவனை பார்த்து கண்
கலங்கி நிற்காதே.
கால் இல்லாதவன் உன்னை
கடந்து போவதை கண் திறந்து பார்...
அப்போது புரியும்
""வாழ்க்கை""

### பொறுமை

கோபப்பட்டு வென்று விட்டாய் என்றால்
உன் கோபம் பெரிதென்று அர்த்தமல்ல.
அதை தாங்கி கொண்டவர்களின் பொறுமை
பெரிது என்று அர்த்தம்!

Collected From Internet.

## ஹைக்கூ

பிறப்பு இறப்பு மட்டுமே நம்மை தேடி வரும்
மற்றவற்றை நாம் தான் தேடி செல்ல வேண்டும்!

Collected From Internet.

## சிந்தனைக்கு

1. கடலில் இருக்கும் அத்தனை நீரும் ஒன்று சேர்ந்தால் கூட ஒரு கப்பலை மூழ்கடிக்க முடியாது – கப்பலுக்குள் புகுந்தால் மட்டுமே அது சாத்தியம். "வாழ்வின் எந்த பிரச்சனையும் உங்களை பாதிக்கவே முடியாது... நீங்கள் அனுமதித்தால் தவிர".
2. ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ, அப்படி எல்லோரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.
3. புரியாததை புரிந்து கொள்ளுங்கள். புரிந்ததை பகிர்ந்து கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

– Collected From Internet

பணியாளர்கள் மற்றும் பணியாளர் களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
- Editor

சுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது? அதற்குப் பதிலாக, ஸ்பாஞ்சை ஒரு கைப்பிடியின் முனையில் பொருத்தி விட்டால் என்ன?

இப்படி யோசித்த அவர், உடனடியானத் தனது யோசனையைச் செயல்படுத்தி பார்த்தார். பிரமாதமாக இருந்தது. ஒரே இடத்தில் நின்றபடி, பல கண்ணாடிகளை அவரால் எட்டித் தொட்டுவிட முடிந்தது. ஆகவே, சுத்தப்படுத்துவதற்கான நேரமும் குறைந்தது.

ஆனால், இப்போதும் ஒரு பிரச்சனை மிச்சமிருந்தது. ஸ்பாஞ்சை அடிக்கடித் தூய்மை செய்யும் திரவத்தில் மூழ்கடித்துப் பயன்படுத்த வேண்டியிருப்பதால், நீண்ட கைப்பிடி அதற்கு இடைஞ்சலாக இருந்தது.

அதற்கும் அட்டகாசமான ஒரு யோசனையைக் கண்டுபிடித்தார் ஓர் ஊழியர். கைப்பிடியை ஒரு குழாயாக மாற்றி, அதோடு திரவம் நிரம்பிய குடுவையை இணைத்துவிட்டால், வேண்டிய போதெல்லாம் அந்தக் குழாயின் வழியே திரவத்தை ஸ்பாஞ்சுக்கு அனுப்பலாம்.

இந்த இரு யோசனைகளின் மூலம், கண்ணாடி ஜன்னல்களைச் சுத்தப்படுத்தும் நேரம் வெகுவாகக் குறைந்தது. ஏனெனில், திரவத்தில் ஸ்பாஞ்சை நனைக்கிற நேரம் மிச்சம், ஒவ்வோர் இடத்துக்கும் நகர்ந்து அல்லது ஏறிச் சென்று சுத்தம் செய்கிற நேரமும் மிச்சம்.

இதேபோல், பணியிடங்களை அல்லது இயந்திரங்களைச் சுத்தம் செய்வதற்கான நாம் பயன்படுத்தும் எல்லா முறைகளையும் மேலும் சிறப்பாக மேம்படுத்துவது சாத்தியம் தான். அதற்கான வழிகளை எல்லோரும், எப்போதும் யோசித்தபடி இருக்க வேண்டும்.

( தொடரும்)

## Electrolyzer For Bromide Free Synthesis Brine

